**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.144/2023**

பெயர் : முகமது சர்புதின் (PW1)

த/க/பெ. :

தேதி : 29.08.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பிறந்து வளர்ந்தது திருக்கலாச்சேரி. எனது பூர்விகம் திருக்கலாச்சேரி. நான் பிரான்ஸ் நாட்டிற்கு வேலை நிமிர்த்தமாக சென்றேன் நான் பிரான்ஸ் குடியுரிமை செய்யவில்லை. நான் பிரான்ஸ்ஸில் இருந்த போது மலேசிய குடியுரிமை பெற்ற பெண்னை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அவர் வியட்நாமை சேர்ந்தவர். அந்த திருமணத்தின் பயனாக ஷாஜிதாபானு என்ற பெண் குழந்தை உள்ளது. அவர் தற்போது அவர் பிரான்ஸ்சில் உள்ளார். அவரை பார்க்க அடிக்கடி பிரான்ஸ் சென்று வருவேன் என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு நான் 6 மாதம் இந்தியாவிலும், 6 மாதம் பிரான்ஸ்ஸில் இருந்தேன். முதல் 6 மாதம் பிரான்ஸ் இருந்தேன். அடுத்த 6 மாதம் இந்தியாவில் இருந்தேன். எனக்கும் வியட்நாமை சேர்ந்த பெண்ணிற்கும் 1996 ல் திருமண உறவு முடிந்து விட்டதுஎன்றால்சரிதான். அதன் பின்னர் சங்கரன் பந்தலை சேர்ந்த அப்துல் சலாம் என்பவரின் மகள் சம்சாத் பேகம் என்பவரை 2 வது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். 2 வது மனைவி மூலமாக எனக்கு குழந்தைகள் இல்லை. 2 வது திருமணம் செய்து கொண்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2 வது மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற்ற பின்னனர் தான் மதப்படி மற்றொரு திருமணம் செய்தேன். எனக்கும் 1 வது பிரதிவாதிக்கும் 28.08.1998 ல் திருமணம் நடைபெற்றது என்றாலும், அது இருவருக்கம் மறுமணம் என்றாலும் சரிதான். திருமணத்தின் போது முதல் பிரதிவாதிக்கு அவரது கணவர் மூலமாக அப்துல் ரசாக் என்ற மகன் என்றால் சரிதன். அப்துல் ரசாக்கை மகன் போல் பராமரிப்பதாக உத்திரவாதம் அளித்தேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதிக்கும் பெயரில் வா.சா.ஆ. 5 13.03.2006 ல் ஹிபா ஆவணம் எழுதிக் கொடுத்தேன்என்றால் சரிதான். ஹிபா வை ரத்து செய்வதற்காக 2019 ல் தான் வழக்கு போட்டேன் என்றால் சரிதான். ஹிபா எழுதிக் கொடுத்து 13 ஆண்டுகள் கழித்து ரத்து செய்ய வழக்கு போட்டுள்ளேன்

என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு ஹிபா ஆவணம் எழுதிய 3 ஆண்டுகளுக்குள் அதை ரத்து செய்ய வழக்கு போடாவில்லை என்றால் சரிதான். 13.03.2006 ல் 1- ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் வசிப்பிட உரிமைமட்டும் தக்க வைத்துக் கொண்டேன் என்றாலும், சொத்துரிமையை தக்க வைத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆவணத்திற்கு எதிராக வாய்மொழி சாட்சி மூலமாக மறுப்பதற்கு இந்திய சாட்சிய சட்டத்தில் இடம் இல்லை என்றால் அதன் விபரம் தெரியாது. எனது வழக்குரையில் 5 வது பத்தியில் செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்க முதல் பிரதிவாதி மிரட்டி உள்ளார் என்று சொல்லி உள்ளேன் என்றால் 2003-2004 ல் என்னை மிரட்டினார்கள். எனது வழக்குரை பாரா 6 ல் 2016 ஜனவரியில் வீடு புகுந்து எனது பாஸ்போட் 25 பவுன் நகை, பவர் ஆவணம் ஆகியவற்றை திரு சென்றுவிட்டேன் என்று சொல்லி உள்ளேன்என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு முதல் 6 மாதங்கள் நான் பிரான்சில் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 2016 முதல் 6 மாதங்கள் நான் பிரான்சில் இருந்ததால் அவ்வாறு புகாரை முதல் பிரதிவாதிக்கு எதிராக எழுப்ப முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு கட்டியுள்ளது 2002. 1ம் பிரதிவாதியை திருமணம் செய்த பின்னர் தான்வீடு கட்டினேன். வீடு கட்டுவதற்கு பதிவுற்ற ஆவணம் மூலம் கடன் பெற்றேன். சொத்தின்புல எண் நினைவில் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 1975 முதல் 2022 வரையிலான தாவா சொத்திற்கான கடன் குறிப்புகள் உள்ளதாக என்றால் சரிதான். ஆனால் கடன் வாங்கியது உண்மை. **மேற்படி வில்லங்கச்சான்று பி.வா.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** முதல் பிரதிவாதி திருமணத்தின் போது எடுத்து வந்த 25 பவுன் நகைகளை வைத்து தான் நான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் சரத்து படி முதல்பிரதிவாதி நடந்து கொள்ளாததால் அந்த ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு கொடுத்துள்ளதாக வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால்சரிதான். பத்திரத்தில் என்ன சரத்து படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி உள்ளேன் என்றால் நான் எதுவும் சொல்லவில்லை. முதல் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தை எனக்கு ரதது செய்ய உரிமைஇல்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியுடன் எனக்கு திருமணம் ஆனது முதல் வழக்கு போடும் வரை தாவா வீட்டில் இருந்தோம் என்றால் நான் வெளிநாட்டில் இருந்தேன். அவர் தாவா வீட்டில் இருந்தார். பதிவு செய்த

ஆவணம் மூலம் முதல் பிரதிவாதிக்கு சொத்தை கொடுத்து விட்டு அதை ரத்த செய்ய கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கு சட்டபடி நிலை நிற்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.